
**ஜனவரி – 21**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநிலக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் (TNSCZMA) ஆனது, முட்டுக்காட்டில் கலைஞர் மாநாட்டு மையத்தினை அமைப்பதற்காக என்று கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அனுமதியை அங்கீகரித்துள்ளது.
- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஆனது, சுவச் சர்வேக்சன் எனப்படும் உலகின் மிகப்பெரிய 9வது நகர்ப்புறத் தூய்மை கணக்கெடுப்பிற்கான (SS) வளத் தொகுப்பினை, புரிந்து கொள்ள மிகவும் எளிமையான, முறை சார்ந்த மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வகையிலான புதிய வடிவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- நோவக் ஜோகோவிச், அதிக கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பங்கேற்றதன் மூலம் ரோஜர் பெடரரின் முந்தைய சாதனையை (429) முறியடித்து டென்னிஸ் போட்டிகளின் வரலாற்றில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல் சாதனையினைப் படைத்துள்ளார்.
- முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் குறைதீர்ப்பாளர் மற்றும் நெறிமுறை அதிகாரியாக நியமிக்கப் பட்டு உள்ளார்.

# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி சூர்ய கர் - முஃப்த் பிஜ்லி யோஜனா திட்டத்திற்கான புதிய வழிகாட்டுதல்கள்




- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது, பிரதான் மந்திரி சூர்ய கர் முஃப்த் பிஜ்லி யோஜனா என்ற திட்டத்திற்கான புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- மேற்கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்னாற்றல் உற்பத்தி அமைப்புகளை நிறுவுவதற்கான இரண்டு கூடுதல் கட்டண மாதிரிகளுக்கு இது அனுமதிக்கிறது.
- இந்த நடவடிக்கை என்பது இந்தியா முழுவதும் உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு இந்த செயல்முறையை மிகவும் தகவமைப்பு மிக்கதாகவும், பாதுகாப்பானதாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய வாய்ப்புகளுடன், மிகவும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் இந்தத்

திட்டத்தினைப் பயன்படுத்தி, சூரிய சக்திக்கு எளிதாக மாறலாம்.

❖ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவை நிறுவன (RESCO) மாதிரியின் கீழ், மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் சூரிய மின்னாற்றல் உற்பத்தி செய்யும் தகடுகளை நிறுவி அவற்றைப் பராமரிக்கின்றன.

❖ இதில் நுகர்வோர் எந்த நிறுவல் செலவினங்களும் இல்லாமல், அவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு மட்டும் பணம் செலுத்தலாம்.

❖ பயன்பாடு சார்ந்த ஒருங்கிணைப்பு மாதிரியின் கீழ், அரசு நிறுவனங்கள் அல்லது DISCOM நிறுவனங்கள் ஆனது வீடுகளுக்கான நிறுவல் செயல்முறையை மேலாண்மை செய்து ஆதரவை வழங்குகின்றன.

## திறந்த நிலை சந்தை விற்பனை திட்டக் கொள்கை 2025




❖ 2024-25 ஆம் ஆண்டிற்கான திறந்த நிலையிலான சந்தை விற்பனைத் திட்ட (உள்நாட்டு) [OMSS(D)] கொள்கையில் மத்திய அரசு ஒரு திருத்தத்தினை அறிவித்துள்ளது.

❖ இந்தக் கொள்கையானது உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதையும் பல்வேறு பங்குதாரர்களுக்கு அரிசியை மிக திறம்பட விநியோகிப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இணைய வழி ஏலங்களில் பங்கேற்க வேண்டிய தேவை இல்லாமல், மாநில அரசுகள், மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் சமூக உணவகங்களுக்கு அதனை விநியோகம் செய்வதற்காக, அரிசியின் அடக்க விலையானது குவிண்டாலுக்கு சுமார் 2,250 ரூபாய் (இந்தியா முழுவதும்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## iSNR மற்றும் INR konnect

❖ இரப்பர் வாரியம் ஆனது iSNR மற்றும் INR connect ஆகிய இரண்டு புதியத் திட்டங்களை அறிவித்துள்ளது.

❖ 1947 ஆம் ஆண்டு ரப்பர் சட்டத்தின் பவள விழாக் கொண்டாட்டங்களின் போது அவை வெளியிடப்பட்டன.

❖ iSNR (இந்திய நிலையான இயற்கை இரப்பர்) இந்திய இரப்பர் உற்பத்தியை மிகவும்

கடுமையான ஐரோப்பிய ஒன்றிய காடழிப்பு ஒழுங்குமுறை (EUDR) தரநிலைகளுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- iSNR திட்டத்தின் முக்கிய அம்சம் அதன் வகை கண்டறிதல் சான்றிதழ் ஆகும்.
- INR connect என்பது தோட்ட உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக வேண்டி, வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாத இரப்பர் மரங்களை வளர்ப்பவர்களை அதனை வாங்கி பராமரிக்க ஆர்வமுள்ளவர்களுடன் இணைப்பதற்காக என்று வடிவமைக்கப் பட்டுள்ள ஒரு வலையமைப்பு தளமாகும்.
- தாய்லாந்து (1வது) மற்றும் இந்தோனேசியா (2வது) ஆகியவற்றைத் தொடர்ந்து, உலக அளவில் இயற்கை இரப்பரை உற்பத்தி செய்வதில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இயற்கை இரப்பரை மிகவும் அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் இயற்கை இரப்பர் உற்பத்தியில் கேரளா 90 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினை கொண்டுள்ளது.
- தமிழ்நாடு, கர்நாடகா, திரிபுரா, அசாம் மற்றும் மேகாலயா ஆகியவை மிக அதிகப் பங்கினை கொண்ட பிற மாநிலங்கள் ஆகும்.




## இந்தியா சிங்கப்பூர் இடையிலான 60 ஆண்டு கால உறவுகள்

- 60 ஆண்டு காலத்திய அரசுமுறை உறவுகளைக் குறிக்கும் வகையில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் இணைந்து ஒரு சிறப்பு கூட்டு முத்திரையினை வெளியிட்டுள்ளன.
- 2004-05 ஆம் நிதியாண்டில் சுமார் 6.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 35.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாக விரிவடைந்ததனால் சிங்கப்பூர் இந்தியாவின் 6வது பெரிய வர்த்தக கூட்டாளியாக மாறியது.
- இந்தியா சிங்கப்பூரிலிருந்து சுமார் 21.2 பில்லியன் அமெரிக்க டாலர் அளவு மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்துள்ளதோடு சிங்கப்பூருக்கு 14.4 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பொருட்களையும் ஏற்றுமதி செய்துள்ளது.
- 11.774 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வரவுடன் இந்தியாவிற்கு வரும் அந்நிய நேரடி முதலீட்டின் மிகப்பெரிய ஆதாரமாக சிங்கப்பூர் இருந்தது.
- சிங்கப்பூரிலிருந்து (ஏப்ரல் 2000–செப்டம்பர் 2024) மேற்கொள்ளப்படும் ஒட்டு மொத்த அந்நிய நேரடி முதலீடு ஆனது 167.47 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது என்ற

ஒரு நிலையில் இது இந்தியாவின் மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் 24% ஆகும்.

- சிங்கப்பூரின் மக்கள்தொகையில் சுமார் 9% பேர் இந்தியர்கள் ஆவர் (சுமார் 3.8 லட்சம்). கூடுதலாக 3.8 லட்சம் வெளிநாடு வாழ் இந்தியர்கள் அந்நாட்டில் வசிக்கின்றனர்.



## PRABHAAV தகவல் அறிக்கை மற்றும் பாரத் புத்தொழில் நிறுவனங்கள் சவால்





- PRABHAAV தகவல் அறிக்கை (தொலைநோக்குடையப் புத்தொழில் நிறுவனங்களின் பெரு முன்னேற்றத்திற்காக ஒரு நெகிழ்திறன் மிக்க மற்றும் துடிப்பான பாரதத்தினை மேம்படுத்துதல்) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது இந்தியாவின் செழிப்பான புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பு மற்றும் 2016 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான அவற்றின் வளர்ச்சிக்கான முழுமையான வழிகாட்டியாகும்.
- PRABHAAV ஒவ்வொரு பிராந்தியத்தின் சாதனைகளையும் பதிவு செய்கிறது.
- பாரத் புத்தொழில் நிறுவனங்கள் சவால் ஆனது பல்வேறு துறைகளில் 75 சவால்களை தொடங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சவாலில், சுமார் 20 தொழில் துறை முன்னணி நிறுவனங்கள் மற்றும் புதுமை படைப்பாளர்கள் வணிக சவால்களை எதிர்கொள்வதற்காக சிந்தனையாளர்களுக்கு சவால் விடுக்கின்றனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## மாநில வருவாய் சார்புப் போக்குகள்

- கடந்தப் பத்தாண்டுகளில், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து வரும் பல நிதிப் பரிமாற்றங்கள் மற்றும் மானியங்களை அதிகமாகச் சார்ந்துள்ளன.

- கடந்தப் பத்தாண்டுகளில் (2016 முதல் 2025 ஆம் நிதியாண்டு வரை) மாநிலங்களின் மொத்த வருவாயில் 23-30% ஆனது மத்திய அரசிடமிருந்துப் பரிமாற்றங்களாக பெறப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டின் முதல் பாதியில், இந்தப் பங்கு 20-24% ஆக இருந்தது.
- மேலும், 2000 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடச் செய்யும்போது கடந்தப் பத்தாண்டுகளில் மாநிலங்களின் வரி சாராத வருவாயில் சுமார் 65-70% ஆனது மத்திய அரசிடமிருந்து மானியங்களாகப் பெறப்பட்டன.
- பல மாநிலங்கள் தங்கள் வசம் உள்ள வரி வசூல் வழிமுறைகளைப் பயன்படுத்தி அந்த வரிகளைத் திறம்பட வசூலிப்பதில்லை.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சொந்த வரி வருவாய் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஆனது 2013-15 ஆம் நிதியாண்டில் 7.72 சதவீதத்திலிருந்து, 2022-24 நிதியாண்டில் 6.17% ஆக படிப்படியாகக் குறைந்துள்ளது.
- கர்நாடகா, கேரளா, பீகார், டெல்லி மற்றும் மத்தியப் பிரதேசத்திலும் இந்த நிலையே நிலவுகிறது.
- மகாராஷ்டிரா, மணிப்பூர், மேகாலயா, ஒடிசா மற்றும் உத்தரகாண்ட் ஆகிய சில மாநிலங்களில் இந்த விகிதம் உயர்ந்துள்ள நிலையில், மற்ற மாநிலங்களில் இது தேக்க நிலையிலேயே உள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## கோள்களின் ஒருங்கிணைவு 2025

- நமது சூரிய மண்டலத்தில் உள்ள நான்கு கோள்கள் – வெள்ளி, சனி, வியாழன் மற்றும் செவ்வாய் ஆகியவை இரவு வானத்தில் வெற்றுக் கண்ணுக்குப் புலப்படவுள்ளன.
- யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவற்றை இந்தக் கோள்களுடன் சேர்த்து, ஆனால்


ஒரு தொலைநோக்கியின் உதவியுடன் காண இயலும்.

- 'கோள்களின் ஒருங்கிணைவு' என்பது நமது சூரிய மண்டலத்தில் உள்ள பல கோள்கள் ஒரே நேரத்தில் இரவு வானத்தில் தெரியும் ஒரு சூழ்நிலையைக் குறிக்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் HCFC நிலை




- 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்தியாவானது உற்பத்தியில் ஹைட்ரோ குளோரோ ஃப்ளூரோகார்பன்களை படிப்படியாக நிறுத்தியுள்ளது.
- இந்த ஒரு படிப்படியான வெளியேற்றம் ஆனது 1987 ஆம் ஆண்டு மாண்ட்ரியல் என்ற நெறிமுறையின் கீழ் உள்ள இலக்குகளின் ஒரு பகுதியாகும்.
- இந்த சர்வதேச ஒப்பந்தம் ஆனது ஓசோன் சிதைப்புப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- HCFC ஆனது கார்பன், ஹைட்ரஜன், குளோரின் மற்றும் ஃப்ளோரின் ஆகியவற்றால் ஆன இரசாயன சேர்மங்களாகும்.
- அவை கனமற்ற இரப்பர் பொருள், குளிர்பதனம் மற்றும் காற்றுப் பதனம் தொழில் துறைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- CFCகள் மற்றும் HCFCகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் மற்றொரு தனிமம் ஹைட்ரோஃப்ளூரோகார்பன் (HFC) ஆகும்.
- அவை பொதுவாக குளிர்பதனம், காற்றுப் பதனம் (AC), கட்டிட வெப்பக்காப்பு, தீ அணைக்கும் அமைப்புகள் மற்றும் தூசிப் படலங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

- 2016 ஆம் ஆண்டில், மாண்ட்ரியல் நெறிமுறையானது, பங்குதாரர் நாடுகள் HFCகளின் பயன்பாட்டையும் கட்டுப்படுத்த என்று ஒப்புக் கொண்ட கிகாலி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது.
- கிகாலி ஒப்பந்தம் ஆனது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு 2036 ஆம் ஆண்டிலும், வளரும் நாடுகளுக்கு 2047 ஆம் ஆண்டிலும் HFCகளை படிப்படியாகக் குறைக்க ஒரு இலக்கை நிர்ணயித்தது.
- இந்தியாவானது 1991 ஆம் ஆண்டில் ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதற்கான வியன்னா உடன்படிக்கையில் ஒரு பங்குதாரராக மாறியது என்பதோடு மேலும், 1992 ஆம் ஆண்டில் மாண்ட்ரியல் நெறிமுறையில் கையெழுத்திட்டது.

## மேற்குத் தொடர்ச்சி மலைகளில் புதிய பெருஞ்சிலந்தி இனங்கள்

- இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில், ஒரு புதிய பேரினம் உட்பட நான்கு புதிய வகை பெருஞ்சிலந்தி இனங்களை/டரான்டுலாக்களை ஆராய்ச்சியாளர் ஒருவர் விவரித்துள்ளார்.
- சிலந்திக்கான தமிழ்ச் சொல்லினைக் கொண்டு பெயரிடப்பட்ட சிலந்திகா எனப்படும் டரான்டுலா முற்றிலும் புதிய வகையாகும்.
- ஹாப்லோக்ளாஸ்டஸ் பிராட்டோகொலோனஸ் ("மரத்தில் வசிக்கும் இனம்" என்று பொருள்படும்) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இரண்டாவது புதிய இனம் ஆனது, ஆறுகளின் ஓரங்களில் உள்ள உள் வெற்றிடம் கொண்ட மரங்களில் வசிப்பிடங்களை உருவாக்குகின்றது.
- மற்றொரு இனமான ஹாப்லோக்ளாஸ்டஸ் மொன்டனஸ், மலைக் காடுகளில் 2,000 மீட்டர் (6,600 அடி) க்கும் அதிகமான உயரத்தில் வாழ்வது கண்டறியப்பட்டது.
- இது இப்பகுதியில் அறியப்பட்ட மிக உயரமான இடத்தில் வாழும் டரான்டுலாக்களில் ஒன்றாகும்.
- சுமார் 1,264 காற்றை சுவாசிக்கும் எண்காலி இனங்கள் தற்போது உலகளவில் சட்ட விரோதமாக வர்த்தகம் செய்யப்படுகின்றன.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய அபாயம் குறித்த அறிக்கை 2025

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, அதன் சமீபத்திய 2025 ஆம் ஆண்டு

உலகளாவிய அபாய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- தவறான தகவல் மற்றும் பொய்யான தகவல் ஆனது அடுத்து வரவிருக்கும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் கடுமையான உலகளாவிய அபாயமாக பார்க்கப்படுகிறது.
- தீவிர வானிலை நிகழ்வுகள் இரண்டாவது கடுமையான அபாயமாக உள்ளன என்ற ஒரு நிலையில் அரசு அடிப்படையிலான ஆயுத மோதல் மூன்றாவது பெரிய அச்சுறுத்தலாக பார்க்கப்படுகிறது.
- அடுத்தப் பத்தாண்டுகளில், தீவிர வானிலை நிகழ்வுகள் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன.
- அதைத் தொடர்ந்து பல்லுயிர்ப் பெருக்க இழப்பு, பூமியின் அமைப்புகளில் மிகவும் முக்கியமான மாற்றம் மற்றும் இயற்கை வளங்களின் மீதான பெரும் பற்றாக்குறை ஆகியவை உள்ளன.
- 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முதல் அறிக்கையிலிருந்து, தீவிர வானிலை நிகழ்வுகள் "சுற்றுச்சூழல் சார் அபாயங்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த நிகழ்வுகள் ஆனது 2014 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் முதல் ஆறு அபாயங்களில் ஒன்றாக முன்னேறியுள்ளன.
- இது 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை பெருமளவிலான உலகளாவிய அபாயமாக தர வரிசைப்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டில் மீண்டும் அந்த நிலையைப் பெற்றுள்ளது.
- குறுகிய காலத்தில் (2025-2027), தீவிர வானிலை நிகழ்வுகள் ஆனது இரண்டாவது மிகக் கடுமையான உலகளாவிய அபாயமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த நிகழ்வுகள் தற்போது 28 நாடுகளில் முதல் ஐந்து குறுகிய கால அபாயங்களுள் பட்டியலிடப் பட்டுள்ளன என்பதோடு இது கடந்த ஆண்டு 24 நாடுகளில் பட்டியலிடப் பட்டது.




# மாநிலச் செய்திகள்

## திரிபுரா - அதிகாரப்பூர்வ மாநில சின்னம்

- உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, திரிபுராவின் மாநில சின்னத்தை அங்கீகரித்து உள்ளது.
- திரிபுரா அரசின் மாநிலச் சின்னத்திற்கான முன்மொழிவு ஆனது, 2007 ஆம் ஆண்டு இந்திய மாநிலச் சின்னம் (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகளின் 4(2)வது விதியின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ளது.
- 1994 ஆம் ஆண்டு S.R. பொம்மை மற்றும் இந்திய ஒன்றிய வழக்கில், மாநிலங்கள் தேசியக் கொடியை அவமதிக்காத வகையில் அவற்றிற்கென சொந்தக் கொடிகளை

வைத்தருக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டமும் மாநிலங்கள் அவற்றிற்கான சொந்தக் கொடிகளை வைத்திருப்பதைத் தடை செய்யவில்லை.




## இதரச் செய்திகள்

### லோக்பாலின் முதல் ஸ்தாபன தினம் - ஜனவரி 16




- இந்திய லோக்பால் அமைப்பின் ஸ்தாபன தினம் ஆனது முதல் முறையாக ஜனவரி 16 ஆம் தேதியன்று புது டெல்லியில் உள்ள மானெக்சா மையத்தில் அனுசரிக்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டின் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தாக்கள் சட்டத்தின் 3வது பிரிவின் படி, 16.01.2014 அன்று இந்திய லோக்பால் நிறுவப்பட்டது.
- இது எந்தவொரு அரசியலமைப்பு அந்தஸ்தும் இல்லாத சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- லோக்பால் ஒரு தலைவரையும் அதிகபட்சமாக 8 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

- இதன் தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரினால் இதன் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
- லோக்பாலின் அதிகார வரம்பில் இந்தியாவின பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அரசின் A, B, C மற்றும் D பணிநிலை அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் அடங்குவர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★